©
GOVERNMENT OF TAMIL NADU
2011

[Regd. No. TN/CCN/467/2009-11.
[R. Dis. No. 197/2009.
[Price: Re. 0.80 Paise.

# TAMIL NADU GOVERNMENT GAZETTE

**EXTRAORDINARY** PUBLISHED BY AUTHORITY

No. 236] CHENNAI, FRIDAY, JULY 22, 2011
Aadi 6, Thiruvalluvar Aandu–2042

## Part VI—Section 2

**Notifications or Orders of interest to a section of the public issued by Heads of Departments, etc.**

### NOTIFICATIONS BY HEADS OF DEPARTMENTS, ETC.

**COLLECTORS AND LOCAL AUTHORITIES**

**ஊராட்சிகளின் ஆய்வாளர் மற்றும் மாவட்ட ஆட்சியர், வேலூர்**

**வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றியம், பொம்மிகுப்பம் ஊராட்சி மன்றத் தலைவர் பதவியிலிருந்து நீக்கம் செய்தல் பற்றிய அறிவிக்கை.**

(ந.க.அ3/241/2009)

**No. VI(2)/401(b-1)/2011.**

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994 பிரிவு 205 உட்பிரிவு 11–ல் ஊராட்சிகள் ஆய்வாளர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த பொம்மிகுப்பம் ஊராட்சி மன்றத் தலைவர் திரு. கே. மாரிமுத்து என்பவர் ஊராட்சி நிதியிலிருந்து துணை ஆதாரச்சீட்டுகள் இல்லாமல் செலவினம் மேற்கொண்டது, அளவுப் புத்தகங்கள் பதியாமல் தொகை எடுத்தது, ஊராட்சிமன்றத் தீர்மானம் இன்றி செலவினம் மேற்கொண்டது, ஊராட்சி நிலுவை வரியினங்கள் வசூலிக்காமல் ஊராட்சிக்கு நிதி இழப்பு ஏற்படுத்தியது மற்றும் தனிநபர் கழிவறை கட்டியதில் உரிய நடைமுறையினை பின்பற்றாமல் முறைகேடு செய்தது தொடர்பாக அன்னார் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள், அக்குற்றச்சாட்டுகளுக்கு ஊராட்சி மன்றத் தலைவர் அளித்த விளக்கங்கள் மற்றும் ஊராட்சி மன்றத்தின் கருத்தினை பரிசீலனை செய்து உளத்தேர்வின்படி பொம்மிகுப்பம் ஊராட்சி மன்றத் தலைவர் திரு. கே. மாரிமுத்து என்பவரை ஊராட்சி மன்றத் தலைவர் பதவியிலிருந்து நீக்கம் செய்து இதன்மூலம் அறிவிக்கை வெளியிடப்படுகிறது.

இவ்வறிவிக்கை தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994 பிரிவு 262 (1)–ன்படி **தமிழ்நாடு அரசிதழில்** வெளியிடப்படும் நாளிலிருந்து அமுலுக்கு வரும் என தெரிவிக்கப்படுகிறது.

**வேலூர் மாவட்டம், கீ.வ. குப்பம் ஊராட்சி ஒன்றியம், மாச்சனூர் ஊராட்சி மன்றத் தலைவர் பதவியிலிருந்து நீக்கம் செய்தல் பற்றிய அறிவிக்கை.**

(ந.க. அ4/2057/2009)

**VI(2)/401(b-2)/2011.**

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994 பிரிவு 205 உட்பிரிவு 11–ல் ஊராட்சிகள் ஆய்வாளர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி வேலூர் மாவட்டம், கீ.வ.குப்பம் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த மாச்சனூர் ஊராட்சி மன்றத் தலைவர் திருமதி. டி. கன்னியம்மாள் என்பவர் தனது அதிகாரத்தை தவறாகப் பயன்படுத்தி ஊராட்சிக்கு தொடர்பில்லாத காங்குப்பம் ஊராட்சி உதவியாளரான தனது மகன் திரு. முனிராஜ் என்பவர் பெயரில் காசோலைகள்மூலம் 2,49,740/– தொகை எடுத்து கையாடல் செய்து, மின்மோட்டார் வாங்கியது, பைப்லைன் விஸ்தரிப்பு பணிகள் செய்தது, சிறுவிசைப்பம்பு அமைத்தது போன்ற பணிகளுக்கு

டெண்டர் விதிமுறைகளை பின்பற்றாமல் ஊராட்சி உதவியாளர் பெயரில் ரூபாய் **3,04,722/–** தொகை எடுத்தது, தனது மகன் திரு. முனிராஜ், காங்குப்பம் ஊராட்சியில் பணிபுரிந்து கொண்டு ஊராட்சியில் வரிவசூல் ரசீதுகளில் கையொப்பமிட்டு வரிவசூல் செய்து ரூபாய் **38,811/–**ஐ வங்கியில் செலுத்தியது, போலியான பில்மூலம் தெருவிளக்கு உபகரணங்கள் வாங்கியது ரூபாய் **12,600/–**, ஊராட்சி தீர்மானமின்றி ரூபாய் **96,462/–** தொகை எடுத்தது, கூட்டத்திற்கு ஆஜராகாத ஊராட்சி உறுப்பினருக்கு அமர்வுபடி ரூபாய் **50/–** வழங்கியது போன்ற முறைகேடுகள் தொடர்பாக அன்னார் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள், அக்குற்றச்சாட்டுகளுக்கு ஊராட்சி மன்றத் தலைவர் அளித்த விளக்கங்கள் மற்றும் ஊராட்சி மன்றத்தின் கருத்தினை பரிசீலனை செய்து உளத் தேர்வின்படி மாச்சனூர் ஊராட்சி மன்றத் தலைவர் திருமதி டி. கன்னியம்மாள் என்பவரை ஊராட்சி மன்றத் தலைவர் பதவியிலிருந்து நீக்கம் செய்து இதன்மூலம் அறிவிக்கை வெளியிடப்படுகிறது.

இவ்வறிவிக்கை தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994 பிரிவு 262 (1)–ன்படி **தமிழ்நாடு அரசிதழில்** வெளியிடப்படும் நாளிலிருந்து அமுலுக்கு வரும் என தெரிவிக்கப்படுகிறது.

S. **நாகராஜன்,**
*ஊராட்சிகளின் ஆய்வாளர் மற்றும்*
*மாவட்ட ஆட்சித் தலைவர்.*

வேலூர்,
2011 ஜூலை 22.

PRINTED AND PUBLISHED BY THE DIRECTOR OF STATIONERY AND PRINTING, CHENNAI
ON BEHALF OF THE GOVERNMENT OF TAMIL NADU